<u>செய்தி வெளியீடு</u> <u>நாள் : 06.11.2024</u>

**சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் 16.60 ஏக்கர் பரப்பளவில் ரூ.12.60 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு வரும், இறுதிகட்ட பணியில் உள்ள போரூர் ஈரநிலை பசுமை பூங்கா மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வெகுவிரைவில் திறக்கப்படும்.**

**மாண்புமிகு அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் தகவல்.**

******

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின்** நல்வழிகாட்டுதலின்படி மாண்புமிகு சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழும அமைச்சர் (ம) தலைவரும் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சருமான **திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள்** இன்று (6.11.2024) சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் 16.60 ஏக்கர் பரப்பளவில் ரூ.12.60 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள போரூர் ஈரநிலை பசுமை பூங்கா, சென்னை, அம்பத்தூர், பானு நகரில் 1.80 ஏக்கர் பரப்பளவில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் ரூ.6 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படவுள்ள விளையாட்டு மைதானம், ரூ.12 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் அம்பத்தூர் எஸ்டேட் புதிய பேருந்து நிலையத்தை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

**மாண்புமிகு இந்து சமய அறநிலைத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் செய்தியாளர்களிடம் பேசும்போது தெரிவித்ததாவது** :

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின்** நல்வழிகாட்டுதலின்படி இன்று சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் 16.60 ஏக்கர் பரப்பளவில் ரூ.12.60 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள போரூர் ஈரநிலை பசுமை பூங்கா, அதேபோல் அம்பத்தூர் பகுதியில் உள்ள பானு நகரில் ரூபாய் 6 கோடி மதிப்பீட்டில் கால்பந்தாட்ட மைதானம், இதே போன்று அம்பத்தூர் தொழிற்பேட்டையில் 12 கோடி மதிப்பில் கட்டப்பட்டு வரும் பேருந்து நிலைய கட்டுமான பணிகள் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

போரூர் ஈரநிலை பசுமை பூங்கா ரூ.12.60 கோடி மதிப்பீட்டில் 16.60 ஏக்கர் பரப்பளவில் கட்டப்பட்டு வருகிறது. இப்பூங்காவில் 103 இருக்கைகள், 560 மீட்டர் நீளம் WPC நடைபாதை, 282 மீட்டர் நீளம் செங்கல் நடைபாதை, 126 மீட்டர் நீளம் கொண்ட கருங்கல் நடைபாதை, கூடைபந்து விளையாட்டு மைதானம், அனைத்து வகையான விளையாட்டு மைதானம், 6.85 ஏக்கர் அளவில் ஏரி, திறந்தவெளி உடற்பயிற்சி மைதானம், பார்க்கிங் வசதி, கழிப்பிட வசதி மற்றும் 2 கடைகள் அமையவுள்ளது.

2024-25 சட்டமன்ற அறிவிப்பில் அறிவித்த சென்னை, அம்பத்தூர் பானு நகரில் விளையாட்டு மைதானம் மேம்பாடு ரூ.6 கோடி மதிப்பீட்டில் 1.80 ஏக்கர் பரப்பளவில் கால்பந்து மைதானம், சிறவர் விளையாட்டு திடல், பார்வையாளர் மாடம் (கேளரி), திறந்தவெளி உடற்பயிற்சி கூடம் அமையவுள்ளது.

சென்னை, அம்பத்தூர் எஸ்டேட் பேருந்து நிலையம் ரூ.12 கோடி மதிப்பீட்டில் மொத்தம் 70,000 சதுர அடி கொண்ட இப்பேருந்து நிலையத்தில் 23,000 சதர அடியில் G + 2 மாடி (Floors) கட்டப்பட்டுள்ளது. மேலும் இப்போருந்தில் 10 கடைகள், 1 சூப்பர் மார்க்கெட் / 2 ATM மையம், முதியோர்களுக்கான தனி இருக்கைகள் / பொதுமக்கள் இருக்கைகள், அலுவலகங்கள் / டிக்கட் கவுண்டர், இருசக்கர வாகனங்கள் நிறுத்துமிடம் / கழிப்பட வசதிகள் (200 Nos.) கட்டப்பட்டு வருகிறது.

அதிமுக ஆட்சியில் திட்டமிடாமல் கட்டப்பட்ட கிளாம்பாக்கம் பேருந்து நிலையம், திமுக ஆட்சியில் உலகத்தரத்தில் முடிக்கப்பட்டுள்ளது.

சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் சார்பில் 18 பேருந்து நிலையங்கள் கட்டப்பட்டு வருகின்றது. குத்தாம்பாக்கம் பேருந்து நிலையம் பிப்ரவரி மாதம் 2025 இல் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன. முடிச்சூர் ஆம்னி பேருந்து நிலையம் முடிக்கப்பட்டு இந்த மாத இறுதியில் **மாண்புமிகு முதல்வர் அவர்கள்** திறந்து வைக்க உள்ளார்.

வடசென்னை வளர்ச்சி திட்டத்தின் கீழ் 7 பேருந்து நிலையங்கள் கட்டப்பட்டு வருகின்றன. ரூபாய் 12 கோடி மதிப்பீட்டில் பயணிகள் பொழுது போக்க தொலைகாட்சி வசதியுடன் கட்டப்பட்டு வரும் அம்பத்தூர், தொழிற்பேட்டை பேருந்து நிலையம் வரும் பிப்ரவரி மாதம் 2025 இல் மக்கள் பயன்பாட்டிற்கு வரும்.

மேலும் சி.எம்.டி.ஏ சார்பில் கட்டப்பட்டு வரும் அனைத்து பேருந்து நிலையங்களும் 2025 டிசம்பர் மாதத்திற்குள் நிறைவடைந்து, மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும்.

இந்த ஆய்வுகளின் போது மதுரவாயில் சட்டமன்ற உறுப்பினர் திரு.க.கணபதி அவர்கள், அம்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.ஜோசப் சாமுவேல் அவர்கள், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை முதன்மைச் செயலாளர் திருமதி.காகர்லா உஷா, இ.ஆ.ப., அவர்கள், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் திரு.அன்சுல் மிஸ்ரா, இ.ஆ.ப., அவர்கள், மண்டலக் குழுத்தலைவர்கள் நொளம்பூர் திரு.வே.ராஜன், திரு.பி.கே.மூர்த்தி, சி.எம்.டி.ஏ தலைமைத் திட்ட அமைப்பாளர்கள் திரு.எஸ்.ருத்ரமூர்த்தி, திரு.ந.ரவிக்குமார், கண்காணிப்புப் பொறியாளர்கள் திரு.ராஜமகேஷ்குமார், திரு.பாலமுருகன், செயற்பொறியாளர் திரு.ராஜன்பாபு, மாமன்ற உறுப்பினர்கள் திருமதி.ஹேமலதா, திரு.டிஎஸ்பி. ராஜகோபால், உள்ளாட்சி பிரதிநிதிகள் திரு.எம்டி.ஆர்.நாகராஜன், திரு.ராதாகிருஷ்ணன் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் உடனிருந்தனர்.